**பூவிருந்தவல்லி நகராட்சி**

**நகர்மன்ற அவசரக் கூட்டம்**

**2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11.04.2023 செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு பூவிருந்தவல்லி நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகரமன்ற அவசரக் கூட்டப் பொருள் நடவடிக்கை விவரம்**

---

**குறள் : ஒல்லும் வகையான அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாஞ் செயல்.**

**-----**

**பொருள் எண்.1**

பூவிருந்தவல்லி நகராட்சி அரசாணை எண்.277, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.07.2004–ன்படி 01.10.2004 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாகவும், அரசாணை எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.08.2010–ன்படி முதல்நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு கடந்த 12 ஆண்டுகள் முதல்நிலை நகராட்சியாக இன்று வரை செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 6.07 சதுர கி.மீ. ஆகும். மேலும், 21 வார்டுகளை கொண்டதாகவும் உள்ளது. 2001–ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 42604ஆகவும், 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 57224ஆகவும், தற்போதைய 2021ஆம் ஆண்டில் உத்தேச மக்கள் தொகை 73043 ஆகவும் உள்ளது.

பூவிருந்தவல்லி நகராட்சி பகுதி சென்னை பெருநகரத்தின் நுழைவு வாயிலாக உள்ளதுடன் அருகில் பல்வேறு பொறியியல் கல்லூரிகளும், மருத்துவ கல்லூரிகளும் உள்ளதாலும் மேலும் பல வெளிநாட்டு தொடர்பான தொழில் நிறுவனங்கள் உள்ள நிலையில் அதில் பணிபுரியும் ஊழியர்கள் பெரும்பாலும் இந்நகராட்சி பகுதியில் குடியிருந்து வருகிறார்கள். தற்போது பூவிருந்தவல்லி நகராட்சி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் பகுதியில் அமைந்துள்ளது. இந்நகருக்கு நடமாடும் மக்கள் தொகை (Floating Population) சுமார் 1.00 ஒரு லட்சத்திற்கும் மேல் வந்து செல்கின்றனர். மேலும், இந்நகரில் மெட்ரோ ரயில் நிலையம் அமைக்கப்பட்டு வருவதாலும் பூவிருந்தவல்லி நகராட்சியை சுற்றி பல கிராமங்கள் உள்ளன. எதிர்வரும் காலங்களில் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழில்கள் ஏற்பட்டு வேலை வாய்ப்பு உருவாகி வருவாய் பெருகி அனைத்து தரப்பு வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதாலும் வர்த்தக முன்னேற்றம் ஏற்பட்டு நகராட்சிக்கு நிதிஆதாரம் மற்றும் வருமானம் உயரும் நிலை ஏற்படும்.

இந்நகராட்சி வளர்ந்து வரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.08.2019–ல் குறிப்பிட்டுள்ளவாறு, தற்போது முதல் நிலை நகராட்சியாக இயங்கி வரும் இந்நகராட்சியினை தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு போதிய வருமானமாக 2021–22ஆம் ஆண்டில் (Audited Accounts-ன்படி) ஒட்டு மொத்த வருமானம் ரூ.1887.32 லட்சமாக உள்ளதாலும், பூவிருந்தவல்லி நகராட்சியினை தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு ஆண்டு வருமானம் ரூ. 9.00 கோடிக்கு மேல் உள்ளதாலும், தரம் உயர்த்துவதற்கான அனைத்து வசதிகள் உள்ளதாக கருதப்படுவதாலும், மேற்சொன்னவாறு, தகவல்களை கருத்தில்கொண்டு இந்நகராட்சியை முதல்நிலை நகராட்சியிலிருந்து தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்த அரசிற்கு கருத்துரு அனுப்பிவைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பூவிருந்தவல்லி நகராட்சியின் வளர்ச்சியை கருத்தில்கொண்டும் எதிர்வரும் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பெறப்படும் மான்யங்கள் மற்றும் நலத்திட்டங்களை பெற்று மக்களுக்கு சிறப்பான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரும்பொருட்டு அரசாணை நிலை எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.08.2019–ல் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் இந்நகராட்சி பூர்த்தி செய்வதை கருத்தில் கொண்டு, முதல்நிலை நகராட்சியிலிருந்து தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கான கருத்துருவினை அரசிற்கு அனுப்பிவைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.1282/2023/சி1

நகரமன்ற தலைவர்
பூவிருந்தவல்லி நகராட்சி